## முழுமையாக மழைநீர் அகற்றப்படும் வரையில்

# தொய்வின்றிக் களப்பணியைத் தொடர்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, அக். 17 -**

**“முழுமையாக மழை நீர் அகற்றப்படும் வரையில் தொய வின்றிக் களப் பணியைத் தொடர்வோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதிபடக் கூறியுள்ளார்.**

கனமழையையொட்டி மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

கனமழை குறித்த ‘அலெர்ட்’ பெறப்பட்டவுடன் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, பொதுமக்களின் ஒத்துழைப்போடு எதிர்கொண்டோம்.

பெரும்பாலான இடங்களின் மழைநீர் தேங்காமல் சரிசெய்யப் பட்டுள்ளது.

முழுமையாக மழைநீர் அகற்றப்படும் வரையில் தொய்வின்றிக் களப்பணியைத் தொடர்ந்திடுவோம்!

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைத் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

## மழை, வெள்ளம்: ‘

# ‘திராவிட மாடல்’ அரசின் சிறப்பான நிவாரணப் பணிகள்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

*சென்னை, அக். 17 -*

தமிழ்நாடு அரசின் மழை, வெள்ள நிவாரணப் பணிகளைப் பாராட்டியும், 37 நாள்களாக ‘சாம்சங்‘ நிறுவனத்தில் நடைபெற்ற தொழிலாளர்கள் போராட்டத்தை முதலமைச்சர் உள்ளிட்ட முத்தரப்பினரின் ஒத்துழைப்பினால் முடிவுக்குக் கொண்டு வந்த நேர்த்தியை வரவேற்றுப் பாராட்டியும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் தொடர்ந்து பெய்துவரும் வடகிழக்குப் பருவ மழையிலிருந்து நம் மக்களைக் காப்பாற்ற - போர்க்கால அடிப்படையில் முன்னெச்சரிக்கை ஆயத்தங்கள்மூலம் அரசு இயந்திரம் விரைந்து செயல்பட முடுக்கிவிட்டார். நமது ‘திராவிட மாடல்‘ முதலமைச்சர்.

**துடிப்புமிகு துணை முதலமைச்சரின் வெள்ள நிவாரணப் பணிகள்!**

அதுதான் துடிப்புமிகு துணை முதலமைச்சர் - திராவிட இளைஞர்களின் எழுச்சி நாயகனாகத் திகழும் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், ஆற்றல்மிகு அமைச்சர் பெருமக்களும், கடமை தவறா அதிகாரிகள், மேயர், துணை மேயர் உள்பட ஒரு நல்ல ஒருங்கிணைந்த கூட்டுக்குழுவின் எடுத்துக்காட்டான பணிகள், ஏற்படவிருக்கும் இயற்கைச் சீற்றத்திற்குச் சரிசமமாக ஈடுகொடுக்கத் தவறவே இல்லை.

இதிலும் ‘அரசியல்‘ செய்து அறுவடைப் பார்க்க, முனையும் அற்ப அரசியல் படமெடுத்தாடினாலும், அதன் பாச்சா பலிக்கவில்லை.

அதுபோல, சென்னையை அடுத்த காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார் சத்திரத்தில் அமைந்துள்ள “சாம்சங்” ஆலைத் தொழிலாளர்களின் போராட்டம் கடந்த 37 நாள்களாக நீடித்து வந்தது. நேற்று (15.10.2024) ஒரு தீர்வு கண்டு அது முடிவிற்கு வந்திருப்பது, சம்பந்தப்பட்ட அனைவரையும் பாராட்ட வேண்டிய - நிம்மதிக்கு வழி வகுத்த நல்ல செய்தி.

இதுபற்றி சி.அய்.டி.யு. (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்) மாநில தலைவர் தோழர் ஏ.சவுந்திரராஜன் அவர்கள் விடுத்துள்ள செய்தியும், நமது முதலமைச்சரின், அமைச்சரின், சி.அய்.டி.யு. நிர்வாகிகள், தொழிலாளர்கள் பாராட்டும், வரவேற்கத் தக்கதாகும்.

**தமிழ்நாடு ஜாதி, மதக் கலவரமற்ற பூமி- எனவே தொழில் வளர்ச்சி!**

வெளிநாட்டுத் தொழில் முதலீட்டாளர்கள், கம்பெனிகள் தமிழ்நாட்டினை நோக்கி வந்து, இங்கே தொழில்வளம் பெருக வாய்ப்புத் தருவதற்கு மூல முக்கிய காரணம், தமிழ்நாடு ஜாதி, மதக்கலவரங்கள் அற்ற, அமைதிப் பூங்காவாக இந்த ‘திராவிட மாடல்‘ ஆட்சியில் திகழ்கிறது என்பதாலேயே!

நமது திராவிடர் இயக்கம் என்றுமே தொழிலாளர் இயக்கம்தான் - பொது உரிமையையும், பொதுவுடைமைக் கொள்கையையும் போற்றியே அந்த அகலப் பாதையில் அடிபிறழாமல் நடைபெறும் இயக்கம். பொதுவுடைமை இயக்கங்களும் (இடதுசாரிகள்) திராவிடமும் இரண்டும் கொள்கைத் தோழமை இணை தண்டவாளங்கள். புதியதோர் சமூகம் வருணபேதம் - வர்க்கம் பேதமிலா ஒரு புரட்சிகர மாற்றம் நிலவிடும் சமூகமே அவற்றின் இலக்கு!



என்றாலும், ஆட்சி நடத்தும்போது - பொதுத் துறை - தனியார்த் துறை - கூட்டுத் துறை போன்றவை இன்றைய சூழலில் தவிர்க்க முடியாத நிலை உள்ளதால், தனித் தொழில் முதலீட்டுத் தொழிற்சாலைக்காரர்களை இருகரம் நீட்டி, வரவேற்று, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கதவுகளைத் திறந்து வைக்கவேண்டியது அரசின் காலக் கட்டாயமாகும். அதில் தொழில் முனைவோர் நலமும் முக்கிய கவனத்திற்கு அரசால் கொள்ளப்படவேண்டிய தவிர்க்க முடியாத அம்சம் என்றாலும், தொழிலாளர் நலமும் முதன்மையானது அல்லவா?

எனவே, கோரிக்கைகள் வைப்பது தவிர்க்க இயலாதவை. அவற்றிற்குத் தகுந்த தீர்வு காண்பதும் இன்றியமையாக் கடமை முத்தரப்புக்குமே!

‘சாம்சங்’ ஆலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தமும் - தமிழ்நாடு முதலமைச்சரின் சிறப்பான அணுகுமுறையும்!

இந்தப் பிரச்சினையில் ஈடுபட்டு, உடன்பாட்டை - முதலமைச்சரின் அறிவுறுத்தலின்படி, ஈடுபட்ட அமைச்சர் பெருமக்கள், எ.வ.வேலு, சி.வி.கணேசன், டி.ஆர்.பி. ராஜா, தா.மோ.அன்பரசன் போன்றோர் மற்றும் தொழிற்சங்க நிர்வாகிகள் - நிர்வாகத் தரப்பு அதிகாரிகள் அனைவருக்கும் மக்கள் மன்றத்தின் மகத்தான பாராட்டுகளும், மகிழ்ச்சி கலந்த வாழ்த்துகளும்!

பேசித் தீர்க்க முடியாத பிரச்சினைகளே உலகத்தில் இல்லை! மனமிருந்தால் மார்க்கம் தானே ஏற்படும் என்பதற்கு மகத்தான எடுத்துக்காட்டு இது!

அரசும் இம்மாதிரி பிரச்சினைகளில் “கடிதோச்சி மெல்ல எறிதல்” என்பதைக் கடைப்பிடித்து, எல்லோருக்கும் வெற்றியே - Win Win Solution என்ற தீர்வைக் கண்டுள்ளார்கள்.

**முத்தரப்பினருக்கும் பாராட்டு!**

தொழிலாளர்கள் வாதாடவேண்டிய நேரத்தில் போராட்டம் நடத்திடும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி, போராடினார்கள் என்பதற்காக அவர்களைப் புறந்தள்ளுவதோ, பழி தீர்ப்பதோ நல்ல பலனைத் தராது. முதலாளி - தொழிலாளி - அரசு ஆகியவை, நாட்டு நலன் - பொதுநலன் என்ற பொதுக் கண்ணோட்டத்திற்கு முன்னுரிமை தந்து, பிரச்சினைகள் எவ்வளவுதான் மலைபோல் வந்தாலும், பனிபோல் கரைய வைக்க பரபஸ்பர ஒத்துழைப்பு ஒருங்கிணைப்பு ஆகியவை நல்ல பயன்தரும் என்பதற்கு இது ஒரு நல்ல முன்னுதா ரணம்.

அனைவருக்கும் நமது பாராட்டும், வாழ்த்துகளும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## தேங்கிய தண்ணீர்! ஒரே இரவில் துரித நடவடிக்கையால் அகற்றம்!

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு நெஞ்சார்ந்த நன்றி!

## பள்ளிக்கரணையில் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் பொதுமக்கள் ஒன்றுதிரண்டு பாராட்டு!

**சென்னை, அக். 17 -**

**தமிழ்நாடு அரசு மேற்கொண்ட துரித நடவடிக்கையின் காரணமாக 2008 ஆம் ஆண்டுக்குப் பிறகு தற்போது தான் மழைநீர் தேங்காமல் சென்றது! ஆய்வுப் பணியின்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் பொதுமக்கள் நேரடியாக ஒன்று திரண்டு பாராட்டைத் தெரிவித்துக் கொண்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.10.2024) 2ஆம் நாளாக கிண்டி ரேஸ் கோர்ஸ், வேளச்சேரி, பள்ளிக்கரணை ஆகிய பகுதிகளில் நேரிடையாக பார்வையிட்டு, மேற்கொள்ளப்படும் மழைவெள்ள நிவாரணப் பணிகளை ஆய்வு செய்தார்.

அப்போது, பள்ளிக்கரணை நாராயணபுரம் ஏரிப் பகுதியில் பொதுமக்கள் ஒன்று திரண்டு முதலமைச்சர் அவர்களிடம், “ துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 14.6.2024 அன்று நள்ளிரவில் பள்ளிக்கரணை பகுதியில் ஆய்வு செய்து மழைநீர் தேங்காமல் செல்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மேலும் அப்பணி நடைபெறும் போது மறுபடியும் நேரிடையாகச் சென்று பார்வையிட்டு துரிதப்படுத்தினார். அதன் விளைவாக இப்பகுதியில் நேற்று பெய்த கன மழையின்போதும், 2008ஆம் ஆண்டிற்குப் பிறகு தற்போது தான் மழைநீர் எங்கும் தேங்காமல் சென்றது. துரிதமான நடவடிக்கையினை ஒரே இரவில் மேற்கொண்டமைக்காக இப்பகுதி மக்களின் சார்பாக முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் தங்களது நெஞ்சார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவிப்பதாக கூறினர்”.

இந்த ஆய்வின்போது, நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் மற்றும் அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.

---

# பருப்பும் பாமாயிலும் - தீபாவளிக்கு தங்கு தடையின்றி வழங்க நடவடிக்கை!

## உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை!

*சென்னை, அக். 17-*

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அவர்கள் பருப்பும், பாமாயிலும் தீபாவளிக்குத் தங்கு தடையின்றி வழங்கப்படும் என்று மீண்டும் வலியுறுத்தி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

துவரம் பருப்பு விநியோகம் தொடர்பாக ஒரு நாளிதழில் வந்த தவறான செய்திக்கு ஏற்கனவே துவரம் பருப்பு மற்றும் பாமாயில் தீபாவளிக்குத் தட்டுப்பாடின்றி வழங்கப்படும் என்று 14/10/24 அன்று அறிக்கை வெளியிட்டுள்ளேன்.

கோயம்புத்தூர் தெற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் என்னுடைய அறிக்கையைப் படிக்காமல் பருப்பு விநியோகம் தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளிட்டுள்ளார். அவரின் பார்வைக்கு என்னுடைய அறிக்கையை அனுப்பியுள்ளேன்.



அக்டோபர் மாதத் துவரம் பருப்பு ஒதுக்கீடான 20751 மெட்ரிக் டன்னில் நேற்று (15.10.2024) வரை 9461 மெட்ரிக் டன் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க ப்பட்டு விட்டது; 20408000 பாமாயில் பாக்கெட்கள் ஒதுக்கீட்டில் 9783000 பாக்கெட்கள் விநியோகப்பட்டுவிட்டன. மீதி விரைவாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன. ஆதலால் தீபாவளிக்கு எவ்விதத் தட்டுப்பாடுமின்றி துவரம் பருப்பும், பாமாயிலும் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை மீண்டும் வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறுஅவர் தெரிவித்துள்ளார்.

---

## கனமழையால் பாதிக்கப்பட்ட

# துறைமுகம் - வில்லிவாக்கம் தொகுதி மக்களுக்கு நிவாரண உதவிகள்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்கினார்.

*சென்னை, அக். 17 -*

சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு நேற்று (16.10. 2024) துறைமுகம், எழும்பூர் மற்றும் வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக ளில் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று மழைநீர் வெளியேற்றும் பணிகளை ஆய்வு செய்ததோடு, நிவாரண முகாம்கள் மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களுக்கு உணவு மற்றும் நிவாரண உதவிகளை வழங்கினார்.

வடகிழக்கு பருவ மழை மற்றும் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக சென்னை மாவட்டத்தில் பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட துறைமுகம் தொகுதி 58 வார்டில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று பாரிமுனையிலுள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் உணவு, பிஸ்கட், பிரட், பால், தண்ணீர் பாட்டில்கள் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார். அதனைத் தொடர்ந்து வில்லிவாக்கம் தொகுதிக்குட்பட்ட 97வது வார்டில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கும் உணவு மற்றும் நிவாரண உதவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்வுகளின்போது மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன். மண்டலக்குழு தலைவர் பி.ஸ்ரீராமுலு, பகுதி செயலாளர்கள் முரளி, ராஜசேகரன், வே.வாசு, கூ.பி.ஜெயின், மன்ற உறுப்பினர்கள் ஆசாத், பரிமளம், நவீன், ராஜேஸ் ஜெயின், டிவி செம்மொழி, சுதா, தீனதயாளன், லதா வாசு, பிரியதர்ஷினி, சாவித்திரி வீரராகவன்,

தலைமை செயற்குழு உறுப்பினர் விஜயகுமார், வட்டக் கழக செயலாளர்கள் எஸ். சத்தியநாராயணன், எஸ். புகழேந்தி, ஆர்,ஏ.அஸ்லாம், டி. கதிரவன், எம். பரத்குமார், கே. கவியரசு, ஆ.நா. பார்த்திபன், மேற்கு பகுதி வட்டக் கழக செயலாளர்கள் எம். ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர். ரவிச்சந்திரன், ஜி ராமமூர்த்தி பா.அண்ணா துரை, டி சதீஷ்குமார், வே.பா. பிரபாகரன், வில்லிவாக்கம் கிழக்கு பகுதி வட்ட கழகச் செயலாளர்கள் எ.வேதா, சீ. விக்னேஷ், ச,மனோகரன், கே. பாஸ்கர், எ. தேவராஜ், காஞ்சி செ.துரை, வில்லிவாக்கம் வட்டச் செயலாளர்கள் சிட்கோ சி.சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாறன், மா.அகிலன், உமா சங்கர், சொ.முருகேசன், ப. லோகுபாபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---



குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று (16.10.2024) வடகிழக்கு பருவமழையையொட்டி, பெருநகர சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலம், வீராங்கல் ஓடையில் மழைநீர் தங்குதடையின்றி செல்வதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் ஆலந்தூர் மண்டலத்தின் கண்காணிப்பு அலுவலர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர்.சு.பிரபாகர், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த இல்லம் சென்ற அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலைஞரின் பெற்றோர் மற்றும், கலைஞர் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, நாகை மாவட்டக் கழகப் பணிகளையும் மக்கள் பணிகளையும் தொடங்கினார். இந்நிகழ்வில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன், தாட்கோ தலைவர் மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளூர் ஷாநவாஸ், நாகை மாலி, மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (16.10.2024) எழும்பூர் சட்டமன்ற தொகுதி, கண்ணப்பர் திடல் சமுதாய நலக் கூடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை சந்தித்து குறைகளை கேட்டறிந்தார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் கே.எஸ். ரவிச்சந்திரன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கடம்பத்தூர் ஒன்றியம் அதிகத்தூர் பூண்டி ஒன்றியம் காந்திகிராமம் திருத்தணி குமாரகுப்பம், திருத்தணி ஒன்றியம் செருக்கனூர் ஆகிய பகுதியில் உள்ள தொடக்கப் பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ள பொது மக்களை சிறுபான்மையினர் நலன் மற்றும் அயல்நாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நேரில் சந்தித்து உணவு மற்றும் நிவாரண பொருட்களை வழங்கி பொதுமக்களுக்கு அளிக்கப்படும் மருத்துவ சிகிச்சைகளை பார்வையிட்டார் உடன் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபு சங்கர், மாவட்ட கண்காணிப்பாளர் ப.முருகேஷ். தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இராஜ்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் வை.ஜெயக்குமார், வருவாய் கோட்டாட்சியர்கள் கற்பகம், தீபா, நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, கே.திராவிட பக்தன், ஒன்றிய நகர செயலாளர்கள் கே. அரிகிருஷ்ணன், வி.வினோத்குமார், ஆர்த்தி ரவி, சி.சு.ரவிச்சந்திரன், ப.ச.கமலேஷ், ஜி.விமல்வர்ஷன், பொன்.பாண்டியன், டி.மோதிலால், மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.